APPENDIX I.

[*Vide answer to Starred Question No.* 87 *on page* 480].

A.—(*a*) The economic rent for the apartments and flats in the Foreshore Estate, Santhome, is fixed according to the following formula approved by the State Housing Board. The formula takes into account—

(1) The total of land cost, cost of building and water-supply, electrical and sanitary fittings.

(2) Interest on land cost at the rate at which the loan was obtained and the annuity for the cost of building and of water-supply, electrical and sanitary fittings which is worked out, taking the life of the building to be eighty years and the rate of interest to be the same rate at which the loan was obtained.

(3) Charge on account of maintenance and repairs which is calculated at 1·5 per cent of cost of building and 3 per cent of cost of water-supply, electrical and sanitary fittings.

(4) Cost of (i) management, (ii) provision for vacancies, bad debts, etc., and (iii) house tax which is worked out at the rate of 0·5 per cent; 0·25 per cent and 1·5 per cent respectively of the total cost of land, buildings and water-supply, etc., in item 1 above.

The annual rent for the building is the total of items (2) to (4) above and the monthly rent is one-twelfth of this sum.

(*b*) Yes.

பதில்.—(அ) கடற்கரை எஸ்டேட்டிலுள்ள வீடுகளுக்கும், மாடி வீடுகளுக்கும் பின்வரும் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்பட்டு, அதனை 'மாநில வீட்டு வசதி வாரியமும்' (State Housing Board) ஒப்புக் கொண்டுள்ளது—

(1) நிலத்தின் விலை, கட்டிடத்தின் விலை, நீர் வழங்கல், மின்சார, துப்புரவு இணைப்புகள் குறித்த செலவு ஆகியவற்றின் மொத்தச் செலவு.

(2) எந்த வட்டி வீதத்தில் கடன் வாங்கப்பட்டதோ, அதே வட்டி வீதத்தில் நிலத்தின் விலைக்கு வட்டி, கட்டிடத்தின் ஆயுட் காலம் எண்பது ஆண்டுகளாகக் கணக்கிட்டு, கடன் வாங்கிய வீதத்திலேயே வட்டி வீதத்தையும் கணக்கிட்டு கட்டிடத்தின் செலவு, தண்ணீர் வழங்கல், மின்சார, துப்புரவு இணைப்புகள் செலவுக்கான ஆண்டுத் தொகை.

(3) பராமரிப்பு, மராமத்துச் செலவு. இது கட்டிடச் செலவில் 1·5 சதவீதத்திலும், தண்ணீர் வழங்கல், மின்சார, துப்புரவு இணைப்புகள் குறித்த செலவில் 3 சதவீதத்திலும் கணக்கிடப்படுகிறது.

(4) (i) நிர்வாகச் செலவு, (ii) காலியிடங்கள், வசூலிக்க முடியாத கடன் முதலியவை குறித்த செலவு, (iii) மேலே 1-வது இனத்தில் சொல்லிய நிலத்தின் விலை, கட்டிடத்தின் விலை, தண்ணீர் வழங்கல் முதலியவை குறித்த செலவு ஆகியவற்றுக்காக முறையே 0·5, 0·25, 1·5 சதவீதத்தில் வீட்டுவரி கணக்கிடப்படுகிறது. மேலே (2) முதல் (4) வரையுள்ள இனங்களின் மொத்தம் வீட்டு ஆண்டு வாடகையாகும். இத்தொகையில் பன்னிரண்டில் ஒரு பாகம் மாத வாடகையாகும்.

(இ) ஆம்.